**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.174/2025** |
| Prosecution witness | : | P.W.1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | கலைவாணி |
| Father's /Husband Name | : | ராஜா |
| Village | : | மேல ஆதிச்சமங்கலம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 27 |
| Occupation | : | வீட்டுக்குடித்தனம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 19th day of January 2026.
A1, A2 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் மேல ஆதிச்சமங்கலம் குடியானத் தெருவில் வசித்து வீட்டுகுடித்தனம் செய்து வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு எனது கணவர் சாலை விபத்தில் இறந்து விட்டார். எனக்கு 5 வயது ஒரு ஆண்குழந்தை உள்ளது. 1ம் எதிரி விஜய்சங்கர் எனது மாமா ஆவார். 2ம்எதிரி எனது கணவரின் சித்தி ஆவார். நாங்கள் ஒரே தெருவில் தான் வசிக்கிறோம். கடந்த 29.05.2025 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் எனது வீட்டு வாசலில் எதிரிகள் இருவரும் எதிரி 1ஐ நான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று என்னிடம் பிரச்சனை செய்தார்கள். மேற்படி எதிரிகள் இருவரும் என்னை குச்சிகாரி மகளே, தேவிடியா மகளே, ஓடிப்போனவளே எனக்கு என்ன உரிமை இருக்கு என்னை அடித்தால் யாரும் உன்னை கேட்க முடியாது என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், மேற்படி சம்பவத்தை அருகில் உள்ள பாண்டியன் மற்றும் பிரேமா பார்த்துக் கொண்டிருந்தார்கள். மேற்படி எதிரிகள் இருவரும் என்னை தகாத வார்த்தைகளால் அவர்களுக்கு முன்பாக பேசியது எனக்கு மிகுந்த அறுவறுப்பையும், ஊர்க்காரர்கள் மத்தியில் எனக்கு தரக்குறைவாகவும் இருந்தது. மேலும் எனக்கு மிகுந்த

மனஉளைச்சலையும் ஏற்படுத்தியது. மேலும் அந்த சம்பவத்தின் போது அதை பார்த்துக்கொண்டிருந்த பாண்டியன் மற்றும் பிரேமா ஏன் என்னை அவரை தவறாக பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு அவர்களிடம் இது குறித்து தலையிட கூடாது என்றும் கூறிவிட்டார்கள். மேற்படி சம்பவத்தின் போது 1ம் எதிரி மதுபோதையில் இருந்தவாறே என்னை தகாத வார்த்தையால் திட்டினார். மேலும் அவர்கள் இருவரும் என்னை கையால் அடிக்க வந்தார்கள். அந்த சமயத்தில் எனது சித்தி சங்கீதா என் வீட்டிற்கு வந்தார். என் மகனை கொன்று விடுவதாக கொலை மிரட்டல் செய்தார்கள். பின்பு எதிரிகள் இருவரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். மேற்படி சம்பவம் குறித்து நான் குடவாசல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

நானும் ஆஜர் எதிரிகளும் உறவினர்கள் என்றால் சரிதான். எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் முன் விரோதம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் ஆஜர் 1ம் எதிரி குடித்துவிட்டு என்னிடம் பிரச்சனை செய்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஆனால் காவல் நிலையத்தில் குடிபோதை காட்டும் இயந்திரம் வைத்து 1ம் எதிரியை சோதனை செய்தார்கள் அதில் அவர் குடிபோதையில் இருந்ததாக காட்டியது. நான் புகாரில் இதை குறித்து சொல்லாமல் தற்போது மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 ஆவணத்தில் இடைச்சொற்களாக தேதியும் நேரமும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் எழுதப்பட்டுள்ள கையெழுத்தும் இடைச்சொற்களாக சேர்க்கப்பட்ட தேதியும் வெவ்வேறு கையெழுத்தாக காணப்படுகிறது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள புகாரில் எனக்கு மனஉளைச்சல் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பாண்டியன் மற்றும் பிரேமா சம்பவம் நடந்த போது உடனிருந்தார்கள் என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஆஜர்

எதிரிகள் என்னிடம் நேரிடையாக எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.01.19 09:07:09 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.